**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar)
Preliminary Register) CC.532/2024
Sessions)

( Prosecution P.W.7
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | சங்கர்கண்ணன் | -- | |
| Father's Name | மகாலிங்கம் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 6th day of March 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணன்கோயில் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் 03.12.2023 அன்று திருவில்லிபுத்துார் நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது இந்திரா நகரைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் வள்ளிமயில் என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று. புகார் மனுவின் தன்னைக் கேற்ப சார்பு ஆய்வாளர் கனேஷன் என்பவர் திருவில்லிபுத்துார் காவல் நிலையக் குற்ற எண். 524/2023 பிரிவு 279, 304(A) IPC ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து. வாதி கொடுத்த புகார் மனுவின் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 திருவில்லிபுத்துார் அவர்களுக்கும் மற்ற நகல்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளார். நான் இவ்வழக்கின் 03.12.2023 தேதி 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வள்ளிநாயகம், பெரியசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் திருவில்லிபுத்துார் அரசு மருத்துவமனைக்குச் சென்று 15.00 மணிக்கு பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். பிரேத பரிசோதனை பாதுகாப்பு அலுவலுக்கு பெண் காவலர் 2813 மாரிஇசக்கி என்பவரை நியமித்தேன். பின் இவ்வழக்கின் சாட்சிகள் வள்ளிமயில், சோபனா, மாரிமுத்து, பாலசரஸ்வதி, முத்துலட்சுமி, சார்பு ஆய்வாளர் கனேசன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் 04.12.2023 தேதி 12.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரி ஈஸ்வரன் என்பவர் நிலையம் ஆஜரானவரை கைது செய்து பின் தக்க ஜமினில் விடுவித்தேன். பின் 12.12.2023 அன்று எதிரி ஓட்டி வந்த TN 67 BA 1356 அபே ஆட்டோ வை வாகன

ஆய்விற்காக வட்டார போக்குவரத்து ஆலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன். பின் சாட்சிகள் 2813 மாரிஇசக்கி மோட்டர் வாகன ஆய்வாளர் திருமதி. பூரனலதா பிரேத பரிசோதனை அறிக்கை அளித்த மருத்துவர் சுரேஷ்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே வழக்கின் விசாரணை முடித்து எதிரி ஈஸ்வரன் மீது பிரிவு 279,304(A) இ.த.ச. பிரகாரம் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். முதல் தகல் அறிக்கை அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4. பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.5. விபத்து வாகனமான ஆட்டோவிற்கான மோட்டர் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.6.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும். தவறான தகவலின் அடிப்படையில் புகார் கொடுக்கப்பட்டு இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. என்று சொன்னால் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்ப இடத்திற்கு செல்லாமல் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் இவற்றை காவல் நிலையத்தில் வைத்தே உற்பத்தி செய்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தானது எதிரியின் கவனக்குறைவாலும் அதிவேகத்தாலும் நடைபெறவில்லைஎன்றும் இறத்து போனவர்தான் கவனிக்காமல் செல்போனை வாங்கும்போது ஆட்டோவின் பின்புறத்திலிருந்து கீழே தவறி விழுந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு எதிரிக்கு சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 6th day of March 2026 .

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN Digitally signed by M VEERANAN Date: 2026.03.06 16:33:19 +0530

**Chief Judicial Magistrate, Virudhunagar District at Srivilliputtur.**